பக்கங்கள் 19

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 மார்கழி 19 வியாழக்கிழமை 04.01.2024 அதிர்வு 157

## 24 மணி நேரத்தில் 1,038 பேர் கைது!

### தேடப்பட்ட 84 பேரும் சிக்கினர்

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் விசேட சோதனை நடவடிக்கையின் கீழ் இன்று அதிகாலை 12.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் 04▸




# யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதியின் வருகைக்கு எதிராகப் போராட்டம்!

## மூவரைக் கைது செய்தது பொலிஸ்; மாநகரம் முழுவதும் கடும் பாதுகாப்பு

(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வருகைக்கு எதிராக இன்று பிற்பகல் தொடக்கம் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்துக்கு அருகில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.



உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally



# அடுத்த தாவல் அரங்கேற்றம்

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி த திசேரா, ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவால் முன்னெடுக்கப்பட்டுவரும் வேலைத்திட்டங்களுக்கு ஆதரவு வழங்கும் வகையிலேயே அவர் ஐக்கிய மக்கள் சக்தி தலைமையில் மலரவுள்ள கூட்டணிக்குத் தமது ஆதரவையும் வெளிப்படுத்தியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் புத்தளம், நாத்தாண்டி தேர்தல் தொகுதி அமைப்பாளராகவும் இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஷான் விஜயலால் த சில்வா கடந்த முதலாம் திகதி ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.




# காலி சிறைச்சாலை கைதி ஒருவர் காய்ச்சல் காரணமாக உயிரிழப்பு

காலி சிறைச்சாலையின் கைதி ஒருவர் காய்ச்சல் காரணமாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார்.

கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் அவர் உயிரிழந்தார் என்று சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

காலி – கொட்டாவ பகுதியைச் சேர்ந்த 29 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்தார் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொள்ளைச் சம்பவம் தொடர்பில் அவர் கைது செய்யப்பட்டு சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# தாயும் மகளும் விபத்தில் சாவு!

கோர விபத்தில் தாயும் மகளும் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பில் இருந்து மாத்தறை நோக்கி அவர்கள் பயணித்த வான் விபத்துக்குள்ளானதில் உயிரிழந்துள்ளனர்.

நேற்று இரவு தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் குருந்துகஹாதெக்ம பகுதியில் லொறியுடன் வான் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

தாய் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். மகள் கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

அம்பலாந்தோட்டை பகுதியைச் சேர்ந்த 57 வயதுடைய பெண்ணும், அவரது 31 வயது மகளுமே இந்த விபத்தில் சாவடைந்துள்ளனர்.

விபத்து தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.




# 13 பிரதேச செயலர் பிரிவுகளில் யாழ்ப்பாணத்தில் டெங்கு பரம்பல்

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேதீஸ்வரன் தகவல்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் மருதங்கேணி மற்றும் நெடுந்தீவு பிரதேசங்கள் தவிர்ந்த ஏனைய 13 பிரதேச செயலர் பிரிவுகளிலும் டெங்கு நோயின் பரம்பல் அதிகரித்துச் செல்கிறது என்று யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.




இன்று வியாழக்கிழமை (04) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் தற்போது டெங்கு நோயின் பரம்பல் தீவிரமாக காணப்படுகின்றது. ஒவ்வொரு நாளும் சராசரியாக 70 தொடக்கம் 100 நோயாளர்கள் புதிதாக அடையாளம் காணப்படுகின்றனர்.

கடந்த டிசெம்பர் மாதத்தில் யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய், சண்டிலிப்பாய் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் டெங்கு நோயின் பரம்பல் தீவிரமாகக் காணப்பட்டது.

தற்பொழுது யாழ்ப்பாண மாவட்டத்தில் மருதங்கேணி, நெடுந்தீவு தவிர்ந்த ஏனைய 13 பிரதேச செயலர் பிரிவுகளிலும் டெங்கு நோயின் பரம்பல் அதிகரித்துச் செல்கிறது.

கடந்த வருடத்தில் யாழ். மாவட்டத்தில் 3 ஆயிரத்து 986 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டனர். இந்த வருடத்தில் முதல் மூன்று நாள்களில் 282 டெங்கு நோயாளர்கள் இனங் காணப்பட்டுள்ளனர்.

இதனால் டெங்கு நோயை கட்டுப்படுத்துவதற்கு பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

சுகாதாரத் திணைக்களம், பிரதேச செயலாளர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் உத்தியோகத்தர்கள், பொலிஸார் மற்றும் முப்படையுடன் இணைந்து வீடு வீடாகச் சென்று டெங்குக் கண்காணிப்பு பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

கடந்த 2 ஆம் திகதி யாழ்ப்பாண பல்கலைக்கழக வளாகத்திலும் அதனை சூழவுள்ள வீடுகளிலும் டெங்கு ஒழிப்பு வேலை திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பரீட்சை மண்டபங்களாக தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளிலும் டெங்கு தொடர்பான பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டு புகையூட்டல் வேலை திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் டெங்கு இறப்புகளை பார்ப்போமேயானால் காலம் தாழ்த்தி வைத்தியசாலைக்கு வந்த நோயாளர்களே இறந்துள்ளனர்.

எனவே எதிர்காலத்தில் டெங்கு அறிகுறி காணப்படும் நோயாளர்கள் உடனடியாக அருகில் உள்ள வைத்தியசாலை நாடுவதன் மூலம் தங்களை டெங்கிலிருந்து பாதுகாத்துக் கொள்ள முடியும். - என்றார்.

# ஓட்டோ சாரதிகளது இக்கட்டு தொடர்பில் பொலிஸார் முறைப்பாடு ஏற்கவில்லை!

## கவலை தெரிவிக்கிறார் 'பிக் மீ' சாரதிகள் ஒன்றியத்தின் தலைவர்

(எஸ்.நிதர்ஷன்)

ஓட்டோ சாரதிகளுக்கு இக்கட்டான சூழல் ஏற்பட்ட போது நாங்கள் நீதியை பெறுவதற்காக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளிக்கச் சென்ற சமயத்தில் எங்களுடைய முறைப்பாடு ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

இவ்வாறு கவலையுடன் 'பிக் மீ' சாரதிகள் ஒன்றியத்தின் தலைவர் அ.கலைச்செல்வன் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று (03) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு–

மக்கள் சேவையில் ஈடுபடும் போது சிலர் தொடர்ந்து இடையூறுகளை ஏற்படுத்தி வருகின்றனர். இந்த விடயத்தைப் பொலிஸ்மா அதிபரின் கவனத்துக்கு கொண்டுசென்றும் நீதி கிடைக்கவில்லை.

யாழ். மாவட்ட ஓட்டோ சாரதிகள் சங்க உறுப்பினர்களுக்கு இடையூறு இன்றி சிறந்த சேவையை வழங்குங்கள் என்று எங்களுடைய சாரதிகளுக்கு உத்தரவிட்டுள்ளோம். அவர்களும் மக்கள் சேவையை சிறப்பாக செய்து வருகின்றனர்.

இருவேறு சந்தர்ப்பங்களில் 'பிக் மீ' சாரதிகளுக்கு இக்கட்டான சூழல் ஏற்பட்ட போது நாங்கள் நீதியை பெறுவதற்காக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளிக்க சென்ற சமயத்தில் எங்களுடைய முறைப்பாடு ஒருதலைப்பட்சமாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

இதனால் தலைமை ஒருங்கிணைப்பாளரிடம் அறிவித்து பொலிஸ்மா அதிபரிடம் அறிவித்தும் இன்றுவரைக்கும் நீதிகிடைக்காமல் விசாரணை முற்றுப் பெறாமல் தொடர்ந்த வண்ணம் இருக்கிறது.

இந்த சேவையை எந்தவித தங்குதடையும் இன்றிப் பாதுகாப்புடன் நேர்த்தியான முறையில் செய்வதற்கு யாழ். மாவட்ட அரச அதிபர், யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர், வடபிராந்திய பொலிஸ்மா அதிபர் ஏற்பாடு செய்து தரவேண்டும்.

நல்லூர்ப் பகுதியில் நேற்று(02) கூட எமக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. இந்த செயற்பாடுகளை வன்மையாக கண்டிக்கிறோம். தொடர்ந்தும் இந்த நிலைமை ஏற்படாமல் உரிய பாதுகாப்பு ஏற்பாட்டுகளுடன் மக்களுக்கு இலகுவான சேவையை செய்வதற்கு வழியை ஏற்படுத்தித் தருமாறு கேட்டுக் கொள்கிறோம்.– என்றார்.

# ரணிலுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்ய
# வவுனியாவில் 5 பேருக்குத் தடை உத்தரவு

(கி.வசந்தரூபன்)

வடக்குக்கு இன்று விஜயம் செய்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாளை வவுனியா செல்லவுள்ள நிலையில், அங்கு ஜனாதிபதிக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்ய 5 பேருக்கு வவுனியா நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

இன்று வவுனியா பொலிஸார், வவுனியா நீதிமன்றில் தோன்றி முன்வைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் இந்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, ஜனாதிபதி நாளை அரச கடமைகளில் ஒன்றான மாவட்ட அபிவிருத்தி தொடர்பாக கலந்துரையாடுவதற்கு வவுனியாவுக்கு வருகை தரவுள்ளார். அந்தக் கூட்டத்தில் அரச அதிகாரிகளும் கலந்துகொள்ளவுள்ளனர். இதன்போது குறித்த பகுதியில் அமைதியின்மை ஏற்படுத்தி, வீதியை மறித்து அல்லது அப்பகுதியை மறித்து குழப்பும் நடவடிக்கையில் சிலர் ஈடுபடவுள்ளனர் என்று கிடைத்த தகவலின் அடிப்படையில் குறித்த 5 பேருக்கு எதிராகவும், அவர்களது அமைப்புக்களுக்கு எதிராகவும் பொலிஸார் தடை உத்தரவு கோரியிருந்தனர். அதனைக் கவனத்தில் எடுத்த மன்றும் குறித்த 5 பேருக்கு எதிராகவும் 03.01.2024 இரவு 12 மணி முதல் 05.01.2024 இரவு 12 மணி வரை தடை உத்தரவு விடுத்துள்ளது.

அதனடிப்படையில் குறித்த தடை உத்தரவானது காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கங்களைச் சேர்ந்த கோ.ராஜ்குமார், கா.ஜெயவனிதா, ஜெனிற்றா, சரோஜினிதேவி மற்றும் முன்னாள் முன்னாள் அரசியல் கைதியும் போராளிகள் நலன்புரி சங்கத்தின் வவுனியா மாவட்ட தலைவருமான அரவிந்தன் ஆகியோருக்குப் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தடை உத்தரவு பொலிஸாரால் சம்மந்தப்பட்டவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### 24 மணி நேரத்தில்...

1,038 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் 67 பேர் தடுப்புக் காவல் உத்தரவின் கீழ் விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன், போதைப்பொருட்களுக்கு அடிமையான 43 பேர் புனர்வாழ்வு மையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த காலப்பகுதியில் 417 கிலோகிராம் ஹெரோயின், 24 ஆயிரத்து 203 கஞ்சா செடிகள் மற்றும் 722 போதை மாத்திரைகள் என்பவற்றுடன் பல்வேறு போதைப்பொருட்களும் மீட்கப்பட்டுள்ளன.

பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பணியகம் மற்றும் விசேட பணியகத்தால் தேடப்பட்டு வந்த 84 சந்தேகநபர்களும் இதன்போது கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

### யாழ்ப்பாணத்தில்...

இந்தப் போராட்டத்தில் ஈடுபடுவர்களில் மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பஸ்ஸில் ஏற்றப்பட்டு யாழ். பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

ஜனாதிபதி இன்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ள நிலையில், யாழ். மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் பாதுகாப்பு கடுமையாக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலக வளாகத்துக்கு வெளியே நீர்த்தாரைப் பிரயோகிக்கும் வாகனங்கள், கலகமடக்கும் பொலிஸார், விசேட அதிரடிப் படையினர் மற்றும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

இன்று யாழ்ப்பாணத்துக்குக் ஹெலியில் வருகை தரும் ஜனாதிபதி மாலை 3 மணியிலிருந்து 5.30 மணி வரை யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெறும் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் பங்கேற்பார் என்று ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும், எதிர்ப்புப் போராட்டத்தையடுத்து ஜனாதிபதி மாலை 4.10 மணிக்குத்தான் அதி விசேட பாதுகாப்புடன் யாழ். மாவட்ட செயலகத்துக்குள் நுழைந்தார்.

இதேவேளை, யாழ்ப்பாணம் பழைய பூங்காவுக்கு அருகிலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராகப் போராட்டம் நடைபெற்று வருகின்றது.

இதையடுத்து அங்கு பொலிஸார் வீதித் தடைகளை அமைத்துப் போராட்டக்காரர்களைத் தடுத்து வைத்துள்ளனர்.









# தேன் வியாபாரி போல் சென்று தாலியை அறுத்தவர்கள் கைது!

யாழ்ப்பாணத்தில் தேன் விற்பனையில் ஈடுபடுவது போல பாசாங்கு செய்து மூதாட்டியிடம் 7 பவுண் பெறுமதியான தாலியை அறுத்துச் சென்றவர்கள் கைது செய்யப்பட்டனர்.

வல்வெட்டித்துறை தொண்டைமானாறு பகுதியில் கடந்த டிசெம்பர் மாதம் 27 ஆம் திகதி நடைபெற்ற சம்பவம் தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டனர்.

கோண்டாவில் மற்றும் தெல்லிப்பழைப் பகுதிகளைச் சேர்ந்த முறையே 50, 41 வயதானவர்களே கைது செய்யப்பட்டனர்.

காங்கேசன்துறை பிராந்திய குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸாரால் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வல்வெட்டித்துறை பொலிஸாரிடம் சந்தேக நபர்கள் ஒப்படைக்கப்பட்டனர்.

# கொழும்புத் துறைமுக நகரத்தில் இரண்டு புதிய முதலீட்டு திட்டங்கள்

## அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்தது

கொழும்பு துறைமுக நகரத்தில் இரண்டு புதிய முதலீட்டு திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதன்படி, ஆசிரி போர்ட் சிட்டி மருத்துவமனை (தனியார்) 100 மில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடு செய்து மருத்துவமனையை மேம்படுத்துவதற்கும், டிக்ரி மென்பொருள் தனியார் நிறுவனம் ஒரு லட்சம் அமெரிக்க டொலர் ஆரம்ப அந்நிய நேரடி முதலீட்டில் தகவல் தொழில்நுட்ப வணிகத்தை தொடங்குவதற்கும் முன்வைத்த இரண்டு முன்மொழிவுகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் என்ற ரீதியில் அதிபர் ரணில் விக்ரமசிங்க இந்த இரண்டு யோசனைகளையும் அமைச்சரவையில் முன்வைத்துள்ளார்.

இந்த நிலையில், இரண்டு திட்டங்களும் மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த இரண்டாம் நிலை வணிகமாக வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னர் அவை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# கலாநிதி கந்தையா ஸ்ரீ கணேசனுக்கு புதுடில்லியில் சார்க் இலக்கிய விருது!

எழுத்தாளரும் விமர்சகருமான கலாநிதி கந்தையா ஸ்ரீ கணேசன் 2023 ஆம் ஆண்டுக்கான சார்க் இலக்கிய விருதை கடந்த மாதம் புதுடில்லியில் நடைபெற்ற சார்க் இலக்கிய விழாவில் பெற்றுக்கொண்டார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆங்கில மொழிக் கற்பித்தல் துறை சிரேஷ்ட விரிவுரையாளரான கலாநிதி கந்தையா ஸ்ரீ கணேசன் ஏற்கனவே இலங்கை அரச சாகித்திய, மாகாண கொடகே இலக்கிய விருதுகளைப் பெற்றவராவர்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# ரணிலின் சமாளிப்புப் பேச்சு

''எரிபொருள் இல்லாத, உரம் இல்லாத, வீழ்ச்சியடைந்த பொருளாதார யுகத்துக்கு நாட்டை மீண்டும் கொண்டு செல்ல முடியாது. கடினமாக இருந்தாலும் இந்தப் பாதையில் செல்வதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை விரைவாகப் பலப்படுத்த முடியும்.''

''தவறான பொருளாதாரத் தீர்மானங்களை எடுப்பதன் மூலம் ரூபாவின் பெறுமதி மீண்டும் வீழ்ச்சியடையும்.''

-இப்படி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கின்றார்.

அரசின் புதிய வரிவிதிப்பு நடைமுறைகளினால் அனைத்துப் பொருள்களினதும் விலைகளும், சேவைகளினதும் கட்டணங்களும் எக்கச்சக்கமாக எகிறியிருக்கின்றன. மக்கள் பெரும் நெருக்கடியை எதிர்கொள்கின்றனர்.

இதனால் நாட்டில் பெரும் குழப்பமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. மீண்டும் அறகலய போன்றதொரு போராட்டக் களத்துக்குள் தென்னிலங்கை குதிக்கக் கூடிய ஏதுநிலைகள் கூட தென்படுகின்றன. மக்கள் போராட்டங்கள், தொழிற்சங்க எதிர்ப்பு நடவடிக்கைகள் அரும்பு கட்டத் தொடங்கியுள்ளன.

ஆனால், கடந்த காலப் பொருளாதாரப் போக்குகளினால் நிலைமை கையை மீறி விட்டது, இதைத் தவிர அரசுக்கு வேறு வழியில்லை என்று கையை விரிக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

சிலர் கூறுவது போன்று மக்களுக்குப் பிடித்தமான பிரபலமான தீர்மானங்களை மேற்கொண்டு நாட்டின் எதிர்காலத்தை இருளடையச் செய்யத் தாம் தயாரில்லை என்றும் அவர் கூறுகின்றார்.

முன்னைய அரசுகள் நிதி தேவைப்பட்டபோதெல்லாம் பணத்தை புதிது புதிதாக அச்சிட்டு புழக்கத்துக்கு விட்டு அதில் அரசை நடத்திக் கொண்டிருந்தன. இந்தக் கண்மூடித்தனமான - பொறுப்பற்ற - போக்கு நாட்டின் பொருளாதாரத்தில் மிக மோசமான பின்விளைவுகளை ஏற்படுத்தும் என அப்போதே எச்சரிக்கப்பட்டும் வந்தது. பின்னர் அதுவே நடந்தது. அதை இப்போது சுட்டிக் காட்டுகின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

''நாங்கள் தொடர்ந்து பணத்தை அச்சடித்துக் கொண்டிருந்தமைதான் எமக்கிருந்த பாரிய பிரச்சினையாகும். அத்தோடு வங்கிகளில் கடன் பெற்றதனால் ரூபாவின் பெறுமதி மேலும் சரிந்தது. அரசாங்கத்தின் தேவைக்காக வங்கிகளில் கடன் பெற்று இரண்டு அரச வங்கிகளும் வீழ்ச்சியடையும் நிலைக்குத் தள்ளப்பட்டன. எனவே, வங்கிகளில் கடன் பெற மாட்டோம் எனவும், பணத்தை அச்சிட மாட்டோம் என்றும் சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்பாடு மேற்கொள்ள வேண்டியிருந்தது. எனவே, அரசின் வருமானத்தை அதிகரிக்க வேண்டும்.

''நமக்குப் பணத்தை அச்சடிக்க முடியாமலும், வங்கிகளில் கடன் பெற முடியாமலும் இருந்தால், அரச வருமானத்தை அதிகரிப்பதுதான் நமக்கு இருக்கும் ஒரே வழி. அதன்போது வற் வரியை அதிகரிக்க வேண்டி ஏற்பட்டது. மேலும், வற் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்ட பல பொருள்கள் வற் வரியின் கீழ் கொண்டு வரப்பட்டன.

''அதன் மூலம் தற்போது நமக்குத் தேவையான வருமானம் கிடைக்கின்றது. இதனால், ரூபாவின் பெறுமதி வலுவடைகிறது. கடினமானாலும் அந்தச் சுமையை நாம் அனைவரும் சுமக்க வேண்டியுள்ளது. இந்த வழியில்தான் நாம் சிரமத்துடனேனும் செல்ல வேண்டும். அதைக் கைவிட்டால் நமக்கு எதிர்காலம் இல்லை.''

- இப்படி விளக்கமளித்திருக்கின்றார் ஜனாதிபதி.

இது - புதிய வரி விதிப்புகள் பற்றிய முடிவு - அவரது அரசு எடுத்திருக்கும் நடவடிக்கை - அவரே ஒப்புக் கொள்வதைப் போல மக்களுக்குப் பிடித்தமில்லாத, மக்களை வருத்துகின்ற, மக்கள் மீது அளவுக்கதிக சுமைகளை சுமத்துகின்ற ஒரு தீர்மானம்.

அது குறித்து - அந்த முடிவு பற்றியும், அதன் விளைவுகள் பற்றியும் - மக்களுக்கு நேரத்துடனேயே வெளிப்படுத்தி, தெளிவுபடுத்தி, உண்மைகளை அம்பலப்படுத்தி, கலந்துரையாடி அதனைச் செய்திருந்தால் இத்துணை குழப்பத்துக்கான சூழ்நிலை இப்போது ஏற்பட்டிருக்காது.

அரசின் வரி அதிகரிப்புத் திட்டத்தினால் இப்படி எல்லாம் நடக்கும் என எதிர்க்கட்சிகள் முன்னர் கூறியபோது அவற்றை மறுத்துரைத்து. வேறு கதை பேசிவிட்டு, இப்போது வந்து இந்த நியாயங்களைப் பிளப்பதில் அர்த்தமில்லை.

'ஆம், எதிர்க்கட்சிகள் இது விடயத்தில் கூறுவது உண்மைதான். நெருக்கடிகள் வரும். எதிர்கொள்ள வேண்டும். அவை தவிர்க்க முடியாதவை. வீழ்ந்த பொருளாதாரத்தைத் தூக்கி நிறுத்த மாற்று வழி இல்லை. இருந்தால் எதிர்க்கட்சிகள் முன் வைக்கட்டும்' - என்று நேரத்துடன் வெளிப்படையாகப் பேசி, பந்தை எதிர்க்கட்சிகளின் களத்துக்குள் ஜனாதிபதி அடித்திருந்தால் இப்போது இப்படி சமாளிப்பு விளக்கப் பேச்சுகளை ஜனாதிபதி ஆற்ற வேண்டி நேர்ந்திராது.



# பாகிஸ்தான் பாதுகாப்புச் செயலர் ஜனாதிபதி ரணிலுடன் சந்திப்பு!



பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரை சிநேகபூர்வமாக வரவேற்ற அதிபர் ரணில் விக்ர மசிங்க, அவருடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன், தேசிய பாதுகாப்பு தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் (ஓய்வு) கமல் குணரத்ன உள்ளிட்டவர்களும் இதில் கலந்துகொண்டனர்.

பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், தேசிய பாதுகாப்பு தொடர்பானஅதிபரின் சிரேஷ்ட ஆலோசகரும் அதிபர் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.

# இறைவரித் திணைக்களம், ஒன்லைன் மூலம் வரி இலக்கங்களைப் பெற்றுக் கொள்ளலாம்!

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் பதிவுசெய்தல் மற்றும் ஒன்லைனில் வரி இலக்கம் (TIN) பெற்றுக் கொள்ள முடியும் என்று உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த வரி இலக்கத்தை பெறுவதற்கான விண்ணப்பத்தை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் இணையத்தளத்திலிருந்தும் பதிவிறக்கம் செய்து அதன் நகலை அச்சிடலாம்.

எனவே, விண்ணப்பத்தைப் பெறுவதற்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துக்குச் செல்ல வேண்டிய அவசியமில்லை என்பதுடன் திணைக்களத்தின் இணையத்தளத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.

வரி இலக்கத்துக்கான விண்ணப்பத்தை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் www.ird.gov.lk என்ற இணையத்தளத்துக்குச்சென்று வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவதன் மூலம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துக்குச் சமர்ப்பிக்க முடியும்.

கோரிக்கையை பரிசீலித்த பிறகு, வரி செலுத்துவோரின் அடையாள எண் (TIN) மற்றும் ஒரு முறை கடவுச்சொல் (PIN) ஆகியவற்றைக் குறிப்பிடும் சான்றிதழ் சம்பந்தப்பட்ட நபர் வழங்கிய மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்படும் என்று உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துக்குச் சென்று வரி இலக்கத்தைப் பெறும்போது, அதற்கான பதிவு விண்ணப்பத்தை பூர்த்தி செய்து உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பிரதான அலுவலகத்தின் 2 ஆவது மாடியில் உள்ள முதன்மைப் பதிவுப் பிரிவில் அல்லது அருகில் உள்ள உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் அலுவலகத்தில் சமர்ப்பிக்கலாம்.

வரி இலக்கத்தை ஒன்லைனில் பெறுவதற்கு அதாவது இ-சேவை மூலம் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டையின் இருபுறமும் ஸ்கேன் செய்து PDF நகலை பதிவேற்றம் செய்ய வேண்டும்.

தேசிய அடையாள அட்டையில் உள்ள முகவரிக்கும் தற்போதைய வசிப்பிட முகவரிக்கும் வித்தியாசம் இருப்பின் அதனை நிரூபிக்கும் வகையில் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆவணத்தின் நகலை பதிவேற்றம் செய்ய வேண்டும் என்றும் உள்நாட்டு இறைவரி திணைக்களம் அறிவித்துள்ளது.

2024 ஜனவரி 01ஆம் திகதி முதல், 18 வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொரு நபரும் வரி இலக்கத்தை பெறுவதை அரச கட்டாயமாக்கியுள்ளது.

இந்த இலக்கத்தை எடுத்துக் கொண்டால், ஒருவர் வரி செலுத்த வேண்டும் என்ற கட்டாயம் இல்லை எனவும், ஆண்டுக்கு 12 லட்சம் ரூபாவுக்கு மேல் வருமானம் ஈட்டினால் மாத்திரமே வரி செலுத்த வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர் காலநிலையால் அச்சம் கொள்ள வேண்டாம்

## அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் தெரிவிப்பு

(எம்.ஏ.றமீஸ்)

உயர்தரப் பரீட்சை எழுதவுள்ள அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் சீரற்ற காலநிலை தொடர்பில் எவ்வித அச்சமும் அடையத் தேவையில்லை. பதற்றம் இன்றிப் பரீட்சைக்கு முகம் கொடுக்க முடியும்.

இடர்பாடுகளை சீர் செய்து பரீட்சை சுமூகமாக நடைபெறுவதற்கு அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் மூலம் அனைத்து வழி வகைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கென விஷேட தொலைபேசி சேவை அறிமுகப்படுத்தப்பட்டு உதவிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் அம்பாறை மட்டக்களப்பு மாவட்டங்களுக்கான பிரதிப் பணிப்பாளர் எம்.ஏ.சி.எம்.றியாஸ் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார். தொடர்ந்தும் அவர் இதுபற்றிக் குறிப்பிடுகையில்,

அம்பாறை மாவட்டத்தில் கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர் தரப் பரீட்சை 95 நிலையங்களில் இடம்பெறவுள்ளன.



உயர்தரப் பரீட்சை எழுதவுள்ள மாணவர்கள் சீரற்ற காலநிலை தொடர்பில் அவர்கள் இடர்பாடுகளுக்கு முகம் கொடுப்பார்களாயின், அதனை எமக்கு தெரியப்படுத்தும் வகையில் விஷேடமாக தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் 0632222218 மற்றும் 0773957883 எனும் இலக்கங்களைக்க அழைப்பினை ஏற்படுத்தி உதவிகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உயர்தரப் பரீட்சைக்காக 68 நிலையங்கள் தயார் படுத்தப்பட்டுள்ளன. சீரற்ற காலநிலை காரணமாக பரீட்சை நிலையங்களுக்கு செல்வதில் சிரமங்களை மேற்கொள்ளும் மாணவர்கள் எமது அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்துக்கு அறியத் தருமிடத்தது நாம் மாணவர்களை பரீட்சை நிலையங்களுக்கு பாதுகாப்பாக கொண்டு சேர்ப்பதற்காக தயார் நிலையில் இருக்கின்றோம்.

மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் வாகரை, கிரான், செங்கலடி, வெல்லாவெளி போன்ற பிரதேசங்களின் தாழ்நிலப் பகுதிகளைச் சேர்ந்த மாணவர்கள் பரீட்சை நிலையங்களுக்கு செல்வதில் ஐயம் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. இந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் 0773957885 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அழைத்து உதவிகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

பரீட்சை நிலையங்களுக்கு மாணவர்களைக் கொண்டு சேர்ப்பது, பரீட்சை வினாத் தாள்களை கொண்டு சேர்ப்பது, பரீட்சை கடமைகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்களை கொண்டு சேர்ப்பது போன்ற விடயங்கள் மற்றும் பரீட்சை தொர்பான ஏனைய விடயங்களுக்கும் உதவும் முகமாக நாம் 24 மணி நேரமும் தயார் நிலையில் உள்ளோம்.- என்றார்.



# சேனநாயக்க நீர்மட்டம் உயர்வு; வான் கதவுகள் திறக்கப்பட்டன!

(பெரியநீலாவணை செய்தியாளர்)

அம்பாறை மாவட்டத்தில் தொடர்ந்தும் பெய்துவரும் அடைமழை காரணமாக தாழ்நிலை பிரதேசங்களில் வெள்ள நீர் பெருக்கெடுத்து வருகின்றன.

சேனநாயக்க சமுத்திரத்தின் நீர்மட்டம் 104.30 அடிக்கு உயர்வடைந்துள்ளதால் 5 வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன என்று மாவட்ட நீர்ப்பாசன திணைக்களம் அறிவித்துள்ளது.

இதனால் தாழ்நிலப் பிரதேசங்களில் வாழும் பொது மக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு மாவட்ட அனர்த்த மத்திய நிலையம் பிரதேச செயலகங்கள் ஊடாக பொது மக்களை கேட்டுள்ளது.

தேவையான அனைத்து முன்னேற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று அம்பாறை மாவட்ட அனர்த்த மத்திய நிலையத்தின் பிரதி பணிப்பாளர் எம்.ஏ.சி.எம் றியாஸ் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் தற்போது பெய்து வரும் அடைமழை காரணமாக இதுவரை 4 ஆயிரத்து 415 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. 289 குடும்பங்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம் பெயர்ந்துள்ளன. 71 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. சம்மாந்துறை பிரதேசத்தில் 4 நபர்கள் காயங்களுக்கு ஆளாகி உள்ளனர் என்று மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.





# நிந்தவூரில் ஏற்பட்டுள்ள வெள்ளம்; வடிந்தோடச் செய்யும் பிரதேச சபை!

## வடிகால்கள் துப்புரவு செய்யும் பணி துரிதகதியில்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

நிந்தவூர் பிரதேசத்தில் தாழ் நிலப் பகுதிகள் வெள்ள நீரால் மூழ்கியுள்ளதால் மக்களின் நாளாந்த இயல்பு நிலை முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது.

வழமையாக நிந்தவூர் ஆதார வைத்தியசாலைக்கு அருகாமையில் செல்லும் பிரதான வடிகானினூடாக வடிந்து செல்லும் வெள்ள நீர் கடலில் சேர்வது வழமையான ஒன்றாகும்.

பொது மக்கள் சிலரின் செயற்பாடுகளால் வடிகான்களுக்குள் வீட்டுக் கழிவுகள், விலங்குக் கழிவுகள், கண்ணாடி மற்றும் போத்தல் ஓடுகள், திண்மக் கழிவுகள் மற்றும் ஏனைய கழிவுகளை நிறைந்து காணப்படுகின்றன.

இதனால் வடிகான்கள் அடைத்து வெள்ளநீர் வடிந்து செல்லாமையே இவ்வாறு தாழ் நிலங்களில் வெள்ளநீர் நிற்பதற்கான பிரதான காரணமாகும்.

நிந்தவூர் பிரதேச சபை மேற்கொண்ட திடீர் நடவடிக்கையின் பயனாக வேலைப் பகுதி மேற்பார்வையாளர் ஏ.எஸ்.நிஸாட் பிரதேச சபை ஊழியர்கள் மூலமாக வடிகான்களை துப்பரவு செய்யும் நடவடிக்கையைத் துரிதப்படுத்தியுள்ளார்.

# சமூக ஊடகங்கள் மூலம் மாணவருக்கு போதைப் பொருளை விற்ற பெண் கைது!

(பாறுக் ஷிஹான்)

பேஸ் புக், வட் அப்ஸ் போன்ற சமூக ஊடகங்கள் மூலம் பாடசாலை மாணவர்களுக்குப் போதைப் பொருளை விநியோகிக்கும் சந்தேக நபருடன் தொடர்பான இளம்பெண் பொதி செய்யும் சாதனங்களுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

சாய்ந்தமருது பொலிஸார் தொடர் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

கொழும்பு புறநகர் பகுதியை சேர்ந்த 26 வயதுடைய பெண் ஒருவரே கடந்த டிசெம்பர் 28 ஆம் திகதி இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நிலையில் 7 நாள்கள் தடுப்புகாவல் உத்தரவின் பிரகாரம் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

அந்தப் பெண்ணின் கணவரும் பிறிதொரு சந்தர்ப்பத்தில் போதைப் பொருள் கடத்திய சம்பவத்தில் சிறைத் தண்டனையை அனுபவித்து வருகிறார்.



இந்த நிலையில் இப்பெண் மற்றுமொரு ஆணுடன் இணைந்து இந்த வியாபாரத்தில் ஈடுபட்டு வந்துள்ளார்.

சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.எல். சம்சுதீன் வழிகாட்டலில் உப பொலிஸ் பரிசோதகர் ரவூப் தலைமையில் செயற்பட்டுவரும் பொலிஸார் இந்தக் கைது நடவடிக்கையை மேற்கொண்டனர்.

விசேட போதை பொருள் ஒழிப்பு குழு ஒன்றை அமைத்து அக் குழுவின் ஊடாக பொது மக்களுக்கு விழிப்பூட்டல்களை வழங்கவும் போதைப் பொருளுடன் தொடர்புடைய நபர்களை அடையாளம் கண்டு நடவடிக்கை எடுக்க பொதுமக்கள் ஒத்துழைப்புகளை வழங்க முன்வர வேண்டும் என்று அம்பாறை மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜே.எச்.எம்.என் ஜயபத்ம அண்மையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.





# சந்நிதியான் ஆச்சிரமத்தால் இந்த வாரம் கிழக்கு மக்களுக்கும் பல்வேறு உதவிகள்!

## 15 லட்சம் ரூபா பெறுமதியான உதவிகள் வழங்கல்

யாழ்ப்பாணம் வடமராட்சி தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் இவ்வாரமும் பல லட்சம் ரூபா பெறுமதியான உதவிகள் நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை வழங்கப்பட்டுள்ளன.

வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட அம்பாறை மாவட்டத்தில் லகுகல கிராம சேவகர் பிரிவில் 60 குடும்பங்களுக்கும், பாணம அபயபுர பகுதியில் 110 குடும்பங்களுக்கும் பாணம கிழக்கு கிராம சேவகர் பிரிவில் 30 குடும்பங்களுக்குமாக மொத்தம் 200 குடும்பங்களுக்கு 7 லட்சம் ரூபா பெறுமதியான உலர் உணவு பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகன் சுவாமிகள் நேரில் சென்று இவற்றை வழங்கி வைத்தார்.

### 3 லட்சத்து 20 ஆயிரம் ரூபாவில் கேப்பாபுலவுக்கு உதவிகள்

இதேவேளை கடந்த மாதம் 28 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டம் கேப்பாபுலவு, பிலக்குடியிருப்பு பகுதியில் உள்ள செங்கதிர் முன்பள்ளியில் கல்வி கற்கும் 10 மாணவர்களுக்கும் கேப்பர்புலவு சூரி முன்பள்ளியில் கல்வி கற்க்கும் 30 மாணவர்களுக்கும் 55 ஆயிரம் ரூபா பெறுமதியான புத்தகப்பைகள், மற்றும் பாடசாலை உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இதேவேளை ஜேர்மனியை சேர்ந்த திருமதி மனோன்மதியின் பிறந்த நாள் கொடையாக பிலக்குடியிருப்பு கிராம சேவகர் பிரிவில் 18 குடும்பங்களுக்கும், வற்றாப்பளை கிராம சேவகர் பிரிவில் 35 குடும்பங்களுக்கும் 2 லட்சத்து 65 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்கள் ஆச்சிரமம் ஊடாக வழங்கப்பட்டன.

### வீடுகள் திருத்தத்துக்கு 2 லட்சம்









சந்நிதியான் ஆச்சிரமத்தின் சைவ கலை பண்பாட்டு பேரவையின் வாராந்த நிகழ்வான கடந்த 29 ஆம் திகதி வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி முள்ளியானை சேர்ந்த பெண் தலைமைத்துவ குடும்பத்தை சேர்ந்த வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலய தரம் 9 இல் கல்வி கற்கும் மாணவி ஒருவருக்கும், உடுவில் தெற்கு பட்டியோடையை சேர்ந்த பொருளாதாரத்தில் நலிவுற்ற குடும்பம் ஒன்றுக்கும் வீடு திருத்த பணிகளுக்காக தலா ஒரு லட்சம் ரூபா வழங்கப்பட்டது.

### யாழ். மாவட்டத்துக்கு 3 லட்சம் ரூபா பெறுமதியில் உலருணவு

யாழ். மாவட்டத்தில் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளான தெரிவு செய்யப்பட்ட 120 குடும்பங்களுக்கு 3 லட்சம் ரூபா பெறுமதியான உலர் உணவு பொருள்களும் வழங்கிவைக்கப்பட்டுள்ளன.



# சீரற்ற கால நிலை காரணமாக மேட்டுநிலப் பயிர்களும் பாதிப்பு

(ஏ.எச்.ஹஸ்பர்)

நாட்டில் ஏற்பட்ட சீரற்ற கால நிலை காரணமாக கிண்ணியா பகுதியில் உள்ள மேட்டு நிலப் பயிர்ச் செய்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளன என்று தோட்டச் செய்கையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கிண்ணியா உப்பாறு கிராம சேவகர் பிரிவின் மயிலப்பன் சேனை, சோள வெட்டுவான், காரவெட்டுவான், கண்டல் காடு போன்ற கிராமங்களில் கடந்த ஐந்து நாள்களுக்கும் மேலாக ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக மேட்டு நிலப் பயிர்களான மிளகாய், மரவெள்ளி , கத்தரி, வெண்டி, கச்சான் உள்ளிட்ட பயிரினங்கள் அழிந்துள்ளன.

இதனால் தாம் நஷ்டமடைந்துள்ளனர் என்று தெரிவிக்கின்றனர். தாங்கள் பயிர்களை மேற்கொண்டு பயிர்ச் செய்கையை ஆரம்பிக்க பல ரூபாவை முதலீடு செய்தும் போதிய விளைச்சல் கிடைக்கவில்லை எனவும் வெள்ள நீரால் பாரிய அழிவுகள் ஏற்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கின்றனர்.

எனவே இது தொடர்பில் கவனம் செலுத்தி உரிய அதிகாரிகள் தங்களுக்கு தேவையான நஷ்ட ஈடுகளை பெற்றுத் தர வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கின்றனர்.

# நுவரெலியா மாவட்டத்தில் மரக்கறி செய்கை பாதிப்பு

(மஸ்கெலியா நிருபர்)

நுவரெலியா மாவட்டத்தில் தற்போது காணப்படுகின்ற தொடர் மழையுடன் கூடிய கால நிலை காரணமாக மரக்கறி உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக மரக்கறிகளின் விலைகள் வேகமாக அதிகரித்துள்ளன.

நுவரெலியா பொருளாதார மத்திய நிலையத்தின் தலைவரும் அகில இலங்கை ஒன்றிணைந்த விசேட பொருளாதார நிலையத்தின் ஆலோசகருமான அருண சாந்த ஹெட்டியாராச்சி கருத்து தெரிவிக்கையில்,



வரலாற்றில் என்றுமே இல்லாத அளவுக்கு தற்போதைய மரக்கறிகளின் விலை உயர்ந்துள்ளது.

இலங்கை வரலாற்றில் முதன்முறையாக மரக்கறிகளின் விலை அதிகரித்த போதிலும் விவசாயிகளுக்கு எவ்வித இலாபமும் கிடைக்கவில்லை.

காய்கறிகளின் விலை உயர்ந்தாலும், கடந்த காலம் முழுவதும் பெய்த கனமழை மற்றும் மோசமான வானிலை காரணமாக விவசாயிகளின் பயிர்கள் முற்றிலும் அழிந்து போயுள் ளன.

கடந்த ஆண்டுகளில் இந்தப் பருவத்தில் 100 கிலோ காய்கறிகளை சேமித்த விவசாயிகள், இந்த ஆண்டு பத்து கிலோ காய்கறிகளை மட்டுமே சேமித்துள்ளனர்.

2023 ஆம் ஆண்டைப் போல இல்லாமல் பிறந்திருக்கு 2024 ஆம் ஆண்டை முறையான திட்டத்தின்படி செயல்படுத்த வேண்டும்.

விவசாயிகள் நலன் கருதி அரசு உதவி செய்ய வேண்டும். அதேநேரம் மரக்கறிகளின் விலை அதிகரிப்புக் காரணமாக நுகர்வோர் மரக்கறிகளை கொள்வனவு செய்வதை தவிர்த்து வருகின்றனர்.

தொடர்ந்தும் மழையுடன் கூடிய காலநிலை அதிகரிக்குமாயின் மேலும் விலை அதிகரிக்கும் அபாயம் உள்ளது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



# அன்னை சாரதா தேவியாரின் 171 ஆவது ஜெயந்தி தின விழா!

**(பழுவூரான்)**

அன்னை ஸ்ரீ சாரதா தேவியாரின் 171 ஆவது ஜெயந்திதின விழா புதன்கிழமை (03) கல்லடி ஸ்ரீ இராம கிருஷ்ணமிஷனில் இடம்பெற்றது.

கல்லடி ஸ்ரீ இராமகிருஷ்ணமிஷன் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், மங்க ளாராத்தி, கோயில் வலம் வருதல், சிறப்புச் சொற்பொழிவு ஆகியன இடம்பெற்றன.

இதன்போது பெரும் எண்ணிக் கையானோர் கலந்து கொண்ட னர்.



# பசறை - அகிரிய வீதியில் பயணிக்க அனுமதி மறுப்பு

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

பசறை- அகிரிய வீதியில் வத்தேக் கடையில் இருந்து, வீதியானது பெரும் மழை காரணமாக முற்றாக சேதமடைந் துள்ளது.

எனவே போக்குவரத்துக்காக இந்த வீதியைப் பயன்படுத்துவோர் மாற்று வழிகளை பயன்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

# இறக்காமம், வரிப்பத்தஞ்சேனையில் 850 ஏக்கர் நெல் அழியும் நிலைமை!

## நீர்ப்பாசனத் திணைக்கள உதவியை நாடும் விவசாய அமைப்புகள்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

இறக்காமம், வரிப்பத்தஞ்சேனை பிரதேசத்தில் 850 ஏக்கருக்கும் அதிகமான நெற்பயிர்கள் குடலை பருவத்தில் நீரில் மூழ்கி அழிவடையும் நிலையில் உள்ளன.

இந்த நிலையில் நீர்ப்பாசன திணைக்களத்தின் உதவியை விவசாய அமைப்புகள் நாடியுள்ளன.



இங்கினியாகல டீ.எஸ்.சேனநாயக சமுத்திரத்தின் வான் கதவுகள் திறந்த நிலையில் அங்கிருந்து பெருக்கெடுத்து வரும் நீரால் வரிப்பத்தஞ்சேனை முதலியார் விவசாய அமைப்பின் கீழுள்ள இலுக்கு வட்டை, கத்தம் ஓதினார் வட்டை, மலையடி ஆகிய கண்டங்களைச் சேர்ந்த சுமார் 850 ஏக்கர் நெல் வயல்கள் முற்றாக நீரில் மூழ்கியுள்ளன என்று முதலியார் வட்டை விவசாய அமைப்பின் பொருளாளர் முஹம்மட் நிஹால் தெரிவித்தார்.

மலையடி வலது கரை நீர்த்தேக்கத்தின் வான் கதவுகள் மூடப்பட்டுள்ளமையே இந்த நிலமை ஏற்படக் காரணம் என்றும் தெரிவித்துள்ளார்.

அம்பாறை மற்றும் நீர்ப்பாசன திணைக்கள பொறியலாளர் அலுவலக அதிகாரிகள் இவ்விடயத்தில் கூடிய கவனம் செலுத்துமாறு விவசாய அமைப்புகள் கேட்டுள்ளனர்.

உள்நாட்டு தேசிய நெல் உற்பத்தியில் பாரிய பங்களிப்பு செய்யும் அம்பாறை மாவட்டத்திலுள்ள இந்தப் பிரதேச விவசாயிகள் பிரதானமான வாழ்வாதரம் விவசாயம் மட்டுமே.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயத்தில் கவனம் செலுத்தி மலையடி வலது கரை நீர்த்தேக்க வான் கதவுகளை திறக்க உதவுமாறு விவசாய அமைப்புகள் கேட்டுள்ளன.



# வெள்ளத்தில் திராய்க்கேணி கிராமம்; மக்களுக்குச் சமைத்த உணவு வழங்கல்!

( வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டம் அட்டாளைச்சேனை பிரதேச செயலர் பிரிவிலுள்ள திராய்க்கேணி தமிழ் கிராமம் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

அங்குள்ள பெரும்பாலான வீடுகள் வெள்ளத்தால் சூழ்ந்துள்ளது. வீதிகளிலும் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது.

அங்கு சென்ற காரைதீவு முன்னாள் தவிசாளரும் சமூக சேவையாளருமான கி.ஜெயசிறில் அங்கிருந்த மக்களுக்கு சமைத்த உணவை வழங்கினார்.

மக்கள் வீதிகளில் நின்று அந்த உணவைப் பெற்றுக் கொண்டனர்.

அங்கு கிராம சேவையாளர் வரவில்லையா என்று ஜெயசிறில் கேட்டதற்கு, நான்கு நாள்கள் ஆகியும் இன்னும் வந்து பார்க்கவில்லை என்று மக்கள் வேதனையோடு கூறினார்கள் .

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள அம்பாறை மாவட்ட தமிழ் மக்களுடைய அவல நிலையில் பங்கு கொள்வதற்கு முன் வாருங்கள். நான் தயார். நீங்களும் தயாராகுங்கள். எந்தப் பிரதேசத்துக்குச் சமைத்த உணவு வேண்டுமோ தொடர்பு கொள்ளுங்கள். உதவி செய்பவர்கள்.

இடர் உதவி வழங்கும் சமூக சேவையாளர்கள் நலன் விரும்பிகள் நேரடியாக உங்களுடைய உதவிகளை வழங்குவதற்கு எங்களுடன் கை கோருங்கள். எமது மக்களுக்காக ஆலயங்களில் அன்னதானம் செய்வதை விட அமுதுகள் செய்வதை விட பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு உங்களால் முடிந்த உதவியை நேரடியாக அல்லது எங்களோடு இணைந்து செய்ய முன் வாருங்கள் என்று ஜெயசிறில் தெரிவித்துள்ளார்.



# ஓட்டமாவடி மத்திய கல்லூரிக்கு நூலக ஆவணமாக்கல் சபை விருது

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்வியமைச்சும் தேசிய நூலக ஆவணமாக்கல் சபையும் இணைந்து தேசியரீதியில்பாடசாலைகளுக்கிடையில் நடத்திய வாசிப்பு மாத போட்டி நிகழ்ச்சியில்பங்குபற்றிவெற்றியீட்டியமைக்காக ஓட்டமாவடி மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) விருது வழங்கும் விழாவில் விஷேட விருதைப் பெற்றுக் கொண்டது.

தேசிய நூலக ஆவணமாக்கல் சேவைகள் சபையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற நிகழ்வில் குறித்த தேசிய வெற்றிச் சான்றிதழ் வழங்கப் பட்டது.

இதனை பாடசாலை சார்பாக கல்லூரி முதல்வர் அல்ஹாஜ் எம்.ஏ.ஹலீம் இஸ்ஹாக் பெற்றுக் கொண்டார்.

மட்டக்களப்பு மாவட்ட பாடசாலைகளில் இந்தச் சான்றிதழை ஓட்டமாவடி மத்திய கல்லூரி மாத்திரம் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.



# பெண்கள், சிறுவர் அமைப்புகளுக்கு புதுவருடத்தை முன்னிட்டு அன்பளிப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அம்பாறை, பதியத்தலாவ பிரதேச செயலக பெண்கள், சிறுவர் அமைப்புகளுக்கு ஶ்ரீலங்கா இஸ்லாமிக் றிலிப் தன்னார்வு அமைப்பால் புதுவருட அன்பளிப்பு வழங்கப்பட்டது.

ஶ்ரீ லங்கா இஸ்லாமிக் றிலிப் தன்னார்வு அமைப்பு அம்பாறை மாவட்டத்தின் பதியத்தலாவ பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பெண்கள் அமைப்புகளுக்கு அவர்களின் அர்ப்பணிப்புள்ள செயற்பாடுகளுக்கு புது வருடத்தை முன்னிட்டு அன்பளிப்புகளை வழங்கியுள்ளது.

பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான வன்முறையை ஒழிக்கும் செயற்பாட்டில் இந்தப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பெண்கள் ஆற்றிய சேவைப் பாராட்டியே இந்த அன்பளிப்பு வழங்கப் பட்டது.

இந்த நிகழ்வில் பதியத்தலாவ உதவி பிரதேச செயலாளர் அப்துல் பாஸித், ஶ்ரீ லங்கா இஸ்லாமிக் றிலிப் அமைப்பின் பிரதிநிதிகள் , பிரதேச செயலக பெண்கள், சிறுவர் பிரிவு உத்தியோஸ்தர்கள் மற்றும் பெண்கள் அமைப்பின் பிரதி நிதிகள் கலந்து கொண்டனர்.

# முட்டையின் விலை உயர்வினால் மஸ்கெலியா பாவனையாளர் பாதிப்பு

(மஸ்கெலியா நிருபர்)

கடந்த சில நாட்களாக மஸ்கெலியா பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களில் கோழி முட்டை விலை அதிகரித்துக் காணப்படுகிறது.

நகரில் உள்ள சதொச நிறுவனம் 35 ரூபா வீதம் தலா ஒரு வாடிக்கையாளருக்கு 30 முட்டைகள் வழங்கியது. இதேவேளை முட்டைகள் தனியார் வர்த்தக நிலையங்களில் 60 ரூபாவுக்கு மேல் விற்பனை செய்யப்படுகின்றன



என்று பாவனையாளர்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் கவனம் செலுத்தி இவ்வாறு விற்பனை செய்யும் வர்த்தகர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாவனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அது மட்டும் இல்லாமல் வெளிநாட்டு சிகரெட் விற்பனையும் அதிகரித்துள்ளது. வெளிநாட்டு சிகரெட் என கூறி போலியான சிகரெட் விற்பனையும் இடம்பெறுகிறது. இநத விடயங்களிலும் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# கல்முனை கல்வி வலயத்துக்கு முப்பது ஆண்டுகளின் பின் கீதம்

(அபு அலா)

கல்முனை கல்வி வலயம் ஆரம்பிக்கப்பட்டு முப்பது ஆண்டுகளின் பின்னர் வலயத்துக்கான கீதம் அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளது. புதிய ஆண்டுக் கடமைகள் ஆரம்பிக்கப்பட்ட போது கீதமும் அறிமுகம் செய்யப்பட்டது.

புதிய கல்வியாண்டிற்கான சத்தியப் பிரமாணமும் நாட்டிற்காக உயிர்நீத்த படைவீரர்களுக்கான மௌனப் பிரார்த்தனையும் வலயக் கல்விப்பணிப்பாளர் எம்.எஸ்.சஹ்துல் நஜீம் தலைமையில் இடம்பெற்ற போதே வலயக் கீதம் இசைக்கப்பட்டு வெளியீடு செய்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் கணக்காளர் வை.ஹபீபுல்லா, பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான எம்.எச்.எம்.ஜாபிர், எம்எச்.றியாஸா, ஜிஹானா ஆலிப், திருமதி வருண்யா, வலயக்கல்விப் பணிமனை அதிகாரிகள் பலரும் பங்கேற்றனர்.

வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹ்துல் நஜீம் தேசியக் கொடியியையும் கணக்காளர் வை. ஹபீபுல்லா மாகாணக் கொடியையும் பிரதிக் கல்விப்பணிப்பாளர் எம்.எச். எம்.ஜாபிர் வலயக் கொடியையும் ஏற்றி வைத்தனர்.

நிந்தவூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் முகம்மட் சாஜித் புதிய ஆண்டுக்கான சத்தியப் பிரமாணத்தை ஒப்புவித்தார்.







# உணவகங்களில் சுகாதார சீர்கேடு; கல்முனை பொது மக்கள் விசனம்!

(பாறுக் ஷிஹான்)

கல்முனை மாநகர சபைக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள உணவகங்களில் அண்மைக் காலமாகச் சுகாதார சீர்கேடுகள் இடம்பெற்று வருகின்றன என்று மக்கள் விசனம் தெரிவிக்கின் றனர்.

உணவு சீர்கேடுகள் மற்றும் உணவகங்களில் பாராதூரமான குறைபாடுகள் காரணமாக அரச, தனியார் அலுவலகர்கள் உட்பட பாடசாலை மாணவர்கள் பாதிக்கப்பட்டு வருகின்றார்கள் என்று குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக மாநகர சபையை அண்டிய புறநகர் பகுதிகளிலும் இவ்வாறான சம்பவங்கள் உணவங்களில் தொடர்ந்து இடம்பெறுகின்றன என்று சுட்டிக்காட்டுகின்றனர்.

இது தவிர உணவுக் கழிவுகள் கூட உடனடியாக அகற்றப்படாமல் உணவகங்களில் தேங்கிக் காணப்படுகின்றன.

கல்முனை நகரப்பகுதி, பெரிய நீலாவணை, மருதமுனை, நற்பிட்டிமுனை, பாண்டிருப்பு, சாய்ந்தமருது உள்ளிட்ட பகுதிகளில் வீதியோரங்களில் உள்ள உணவகங்களில் இவ்வாறான நிலை உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.



கல்முனை பிராந்தியத்தில் உணவகங்களின் எண்ணிக்கை மிக அதிகமாக காணப்படுகின்றன. அதிக பொது மக்கள் உணவுத் தேவைகளை இந்த உணவகங்களில் பூர்த்தி செய்வதை அவதானிக்க முடிகின்றது.

ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரி பிரவிலும் திடீர் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக உணவு பாதுகாப்பு கண்காணிப்பாளர்கள் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் கடமையாற்றுகின்ற போதிலும் இவ்வாறான சுகாதார சீர்கேடுகள் தொடர்கதையாகவே உள்ளன என்று பாதிக்கப்பட்டோர் குறிப்பிடுகின்றனர்.

எனவே பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் இனியாவது இச்சீர்கேடுகளை தடுத்து நிறுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.





# கைதடி ஊற்றல் மயான வீதி இளைஞர்களால் புனரமைப்பு

(த.சுபேசன்)

தென்மராட்சி – கைதடி கிழக்கு ஊற்றல் மயானத்துக்குச் செல்லும் பிரதான வீதி அண்மையில் பிரதேச மக்களுடைய பங்களிப்போடு இளைஞர்களால் புனரமைக்கப்பட்டுள்ளது.

அதிக மக்களுடைய பயன்பாட்டில் உள்ள இந்த வீதியில் நீண்ட காலமாக பாரிய குழி காணப்பட்டு மாரி காலத்தில் போக்குவரத்துக்குப் பெரும் சிரமம் ஏற்பட்டு வந்தது. இந்த நிலையில் பிரதேச மக்கள் இணைந்து இந்த முன்மாதிரியான செயற்பாட்டை முன்னெடுத்துள்ளனர்.

மாரி காலத்தில் இந்த வீதி ஊடாகப் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலை காணப்பட்டதால் கைதடி இராசபுரி, கலைநகர் மற்றும் பண்டகவயல் பகுதி மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வதைத் தவிர்த்து வந்தனர். இந்த நிலையிலேயே பிரதேச மக்கள் இணைந்து முதற்கட்டமாக 50 மீற்றர் நீளமான சேதமடைந்த வீதிப் பாகத்தை புனரமைத்துள்ளனர்.



# வெள்ளத்தால் பாதித்த மக்களுக்கு இராமகிருஷ்ண மிஷனால் உணவு

(வி.ரி.சகாதேவராஜா)

மட்டக்களப்பு கல்லடி விவேகானந்த புரத்தில் கன மழையாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட ஒரு தொகுதி மக்களுக்கு கல்லடி இராமகிருஷ்ண மிஷன் சமைத்து உணவை வழங்கியது.

இராமகிருஷ்ண மிஷன் மட்டக்களப்பு சிறுவர் இல்ல பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் முன்னின்று அந்த சமைத்த உணவுகளை மக்களுக்கு வழங்கி வைத்தார் .

சுமார் 150 குடும்பங்களுக்கு சமைத்த உணவு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





# அம்பாறையில் நுகர்வோர் சட்டத்தை மீறிய 40 வர்த்தகர்களுக்கு அபராதம்!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அம்பாறை மாவட்டத்தில் கடந்த டிசெம்பர் மாதம் நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தை மீறி வியாபார நடவடிக்கையில் ஈடுபட்ட 40 வர்த்தகர்களுக்கு எதிராக நீதிமன்றங்களில் ஒரு லட்சத்து 16 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது என்று பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் அம்பறை மாவட்டப் பொறுப்பதிகாரி எஸ்.என்.எம்.சாலிய பண்டார தெரிவித்துள்ளார்.

அக்கரைப்பற்று, கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில், அம்பாறை மற்றும் தெஹியத்தக்கண்டிய ஆகிய பகுதிகளில் பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபையின் புலனாய்வு பிரிவினர் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின் போது நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தை மீறி வியாபார நடவடிக்கையில் ஈடுபட்ட 115 வியாபாரிகள் கைது செய்யப்பட்டு நீதிமன்றங்களில் ஆஜர்படுத்தப்பட்டனர். இவர்களில் 40 வியாபாரிகளிடம் தண்டப்பணம் அறவிடப்பட்டது. ஏனையோருக்கு வழக்கு தொடரப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்டுப்பாட்டு விலையை விடக் கூடுதலான விலைக்குப் பொருள்கள் விற்பனை செய்யப்படுகிறது என்று நுகர்வோர் செய்த முறைப்பாட்டை அடுத்தே இந்தச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

அத்தியாவசிய பொருள்களை அரசால் நிர்ணயிக்கப்பட்ட விலையை விட கூடுதலான விலைக்கு விற்றமை, விலைப் பட்டியலை காட்சிப்படுத்தாமை, நுகர்வுக்குப் பொருத்தமில்லாத பொருள்களைக் காட்சிப்படுத்தியமை, காலாவதியான மற்றும் தரமற்ற பொருள்களை விற்பனை செய்தமை, மின் உபகரணங்களின் கட்டுறுதிக் காலத்தை வழங்காமை போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்ட வியாபாரிகளே இவ்வாறு கைது செய்யப்பட்டனர் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பிரதமர் நரேந்திர மோடியின் வருகையால் கட்சியினரிடையே எழுச்சி ஏற்பட்டுள்ளது

## அண்ணாமலை பெருமிதம்



பிரதமர் நரேந்திர மோடியின் வருகையில் தமிழக பா.ஜ.கவினரிடையே எழுச்சி ஏற்பட்டுள்ளது என அந்த கட்சியின் மாநிலத் தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

சேலம் கெஜல்நாயக்கன்பட்டியில் பா.ஜ.க. அலுவலகத்தை மாநிலத் தலைவர் அண்ணாமலை நேற்று திறந்துவைத்தார்.

இதன்பின்னர், அவர் செய்தியாளர்களிடம் அவர் கருத்து தெரிவிக்கையில்,

”தமிழகம் வந்த பிரதமர் மோடிக்கு, மக்கள் பிரம்மாண்ட வரவேற்பு அளித்தனர். பிரதமர்வருகையால் தமிழக பா.ஜ.கவினரிடையே எழுச்சி ஏற்பட்டுள்ளது.

பெரியார் பல்கலைக்கழகத்தை தேசிய அளவில் தரம் உயர்த்தியவர் துணைவேந்தர் ஜெகநாதன். அவர் உள்பட 4 பேராசிரியர்கள் சேர்ந்து, தனியார் நிறுவனத்திடம் இருந்து வரும் பணத்தை, அறக்கட்டளை மூலமாக மாணவர்களின் திறமையை வளர்க்கும் நிறுவனத்தை ஆரம்பித்துள்ளனர். நாடு முழுவதும் பல்வேறு பல்கலை. களில் இதுபோன்ற நிறுவனங்கள் உள்ளன. இதில் எந்த தவறும் இல்லை. துணைவேந்தர் மீது முகாந்திரமின்றி வன்கொடுமைவழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

துணைவேந்தர் கைது நடவடிக்கை விவகாரம் தொடர்பாக, டி.ஜி.பி, சேலம் பொலிஸ் ஆணையர் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவுக்கு பா.ஜ.க. சார்பில் கடிதம் எழுதப்பட்டுள்ளது.

ஆத்தூரில் இரு விவசாயிகளுக்கு அமலாக்கத் துறை நோட்டீஸ் அனுப்பிய விவகாரத்தில், சம்பந்தமே இல்லாமல் பா.ஜ.க. மாவட்ட இலக்கிய அணி செயலாளரை தொடர்புபடுத்துகின்றனர்.

பிற மாநிலங்களில் பெயருடன் சாதிப் பெயரையும் இணைத்தே எழுதுகின்றனர். அதனடிப்படையில்தான் விவசாயிகளின் சாதிப் பெயரை அமலாக்கத் துறை குறிப்பிட்டிருக்கும். தமிழக பொலிஸாரும் எஃப்.ஐ.ஆர். இல் சாதிப் பெயரை குறிப்பிட்டுத்தான் எழுதுகின்றனர்.

தமிழகத்தில் பட்டியல் இனத்தவரைப் பாதுகாக்க வன்கொடுமை சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதுடன், தவறாகப் பயன்படுத்துவோர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வெள்ள நிவாரண நிதி வழங்குவதில் முறைகேடு நடக்கக் கூடாது என்பதற்காகத்தான், தொகையை வங்கிக் கணக்கில் செலுத்துங்கள் என்றோம்.” – என்றார்.

# பாகிஸ்தான் எல்லை பகுதிகளில் இந்திய ட்ரோன் தடுப்பு கருவிகள்!



ஆயுத கடத்தல், போதைப் பொருள் கடத்தல் ஆகியவற்றை ஒழிப்பதற்காக, பாகிஸ்தான் எல்லையில் அடுத்த 6 மாதங்களில், உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட ட்ரோன் தடுப்பு கருவிகள் நிறுவப்படவுள்ளன.

பாகிஸ்தானிலிருந்து பஞ்சாப் மற்றும் ஜம்மு காஷ்மீர் பகுதிக்குள் ஆயுதங்கள் மற்றும் போதைப் பொருள் கள் ட்ரோன் மூலம் கடத்துவது பல ஆண்டுகளாக நடைபெறுகிறது.

கடந்த ஓராண்டில் பஞ்சாப்பில் 81 டிரோன்களும், ராஜஸ்தானில் 9 ட்ரோன்களும் கைப்பற்றப்பட்டன என எல்லை பாதுகாப்புப் படை தலைமை இயக்குநர் நிதின் அகர்வால் ஏற்கெனவே கூறியிருந்தார்.

பாகிஸ்தான் எல்லை வழியாக கடந்தாண்டில் 300 முதல் 400 ட்ரோன்கள் வந்ததை காண முடிந்தது என எல்லை பாதுகாப்புப் படை தெரிவித்துள்ளது.

கடத்தல் காரர்கள் 750 கிராம் எடையில் உள்ள மிகச் சிறிய ட்ரான்களை இயக்குகின்றனர். இந்த வகை டிரோன்கள் எல்லாம் மலிவு விலையில் கிடைக்கும் சீன ட்ரோன்கள். இதனால் பாகிஸ்தான் எல்லைப் பகுதி முழுவதும் ட்ரோன் தடுப்பு கருவிகள் அமைக்கப்படவுள்ளன.

இது தொடர்பாக மத்திய அரசின் உயர் அதிகாரி ஒருவர் கருத்து தெரிவிக்கையில்,

”ட்ரோன் தடுப்பு தொழில்நுட்பம் குறித்த 3 விதமான பரிசோதனைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவற்றில் ஏதாவது ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தொழில்நுட்பங்கள் இணைந்த டிரோன் தடுப்பு கருவிகள் மேற்கு எல்லை பகுதி முழுவதும் நிறுவப்படும்.

பஞ்சாபில் தற்போது கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளதால், கடத்தல் காரர்கள் தற்போது ராஜஸ்தான் வழியாக கடத்துகின்றனர். கண்காணிப்பில் இருந்து தப்புவதற்கு, கடத்தல்காரர்கள் ட்ரோன்களை மிக உயரத்தில் இயக்குகின்றனர்.

ஆனால் அவற்றையும் கண்டுபிடிக்கும் வகையில் எல்லை பாதுகாப்புப் படையின் கண்காணிப்புகருவிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.” என்றார்.

# ஹமாஸின் முக்கிய தலைவர் பலி: மீண்டும் போர் பதற்றம் அதிகரிப்பு





இஸ்ரேல் ஹமாஸ் தாக்குதலில், ஹமாஸ் துணை தலைவர் சலே அல் அரூரி பலியாகியுள்ளதால் போர் பதற்றம் அதிகரித்துள்ளது.

ஹமாஸ் அமைப்பின் துணைத் தலைவர் சலே அல்-அரூரி, லெபனானின் பெய்ரூட்டின் தெற்கு புறநகர் பகுதியில் இஸ்ரேலிய ஆளில்லா விமானம் தாக்குதலில் குறைந்தது ஐந்து பேருடன் கொல்லப்பட்டுள்ளார் என ஹமாஸ் அமைப்பு உறுதிப்படுத்தியது.

லெபனான் அரசு நடத்தும் தேசிய செய்தி நிறுவனம், இந்த குண்டு வெடிப்பில் நான்கு பேர் கொல்லப்பட்டனர் எனவும் லெபனான் தலைநகரின் தெற்கு புறநகர்ப் பகுதியில் வெடிப்பு ஏற்பட்டதை அடுத்து இஸ்ரேலிய ஆளில்லா விமானம் ஒன்று வெடித்து சிதறியதாகவும் தகவல் தெரிவித்திருந்தது.

இந்த விடயம் தொடர்பாக கருத்து தெரிவிக்க இஸ்ரேல் அதிகாரிகள் மறுத்துவிட்டனர்.

தாக்குதலுக்கு பின்னணியில் இஸ்ரேல் இருந்தால், இஸ்ரேல் ஹமாஸ் தாக்குதல் உக்கிரமடையும் என கூறப்படுகிறது.

இந்த நிலையில், ஹமாஸ் குழுவின் துணை தலைவர் உயிரிழந்துள்ளார் என தெரிவித்த சிறிது நேரத்திலேயே, பலஸ்தீனத்தின் ரமல்லாவில் ஹமாஸ் அமைப்பினர் மற்றும் ஆதரவாளர்கள் வீதிகளில் இறங்கி போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். அவரின் மரணத்திற்கு பழிவாங்குமாறு கோஷமிட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

ஹமாஸ் குழுவின் துணை தலைவர் பலஸ்தீனத்தின் ஜனாதிபதி மஹ்மோத் அப்பாஸ் உடன் நல்லுறவு கொண்டிருந்ததுடன் போட்டி குழுக்களிடையே நல்லிணக்கத்தை உருவாக்க முயன்று வந்துள்ளார். இந்த சூழ்நிலையில் அவர் உயிரிழந்தது பெரும் பதற்றத்தை உருவாக்கியுள்ளது.

அதேவேளை, லெபனானில் உள்ள பலஸ்தீனியர்கள் மீது இஸ்ரேல் குறிவைத்தால் பதிலடி கொடுக்கப்படும் என ஹிஸ்புல்லா தலைவர் சையத் ஹசன் நஸ்ரல்லா உறுதியளித்துள்ளதால் பதற்றம் அதிகரித்துள்ளதாக கூறப்படுகிறது.

# ஜப்பான் நிலநடுக்கத்தால் இதுவரை 73 பேர் பலி!

ஜப்பானில் அடுத்தடுத்து ஏற்பட்ட நிலநடுக்கங்களால் இதுவரை 73 பேர் உயிரிழந்துள்ளனர் என ஜப்பான் அரசு அறிவித்துள்ளது.

மேலும் தொடர்ந்து இடிபாடுகளில் சிக்கியவர்களை மீட்கும் பணிகள் இடம்பெற்று வருவதால் உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

மரணமடைந்த அனைவரும் முதல் நிலநடுக்கம் ஏற்பட்ட இஷிகாவா மாகாணத்தை சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

33 ஆயிரத்துக்கு அதிகமான மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளதாகவும், 1 லட்சத்துக்கும் மேற்பட்ட வீடுகளில் தண்ணீர் சேவை துண்டிக்கப்பட்டுள்ளதாகவும் அரசு தெரிவித்துள்ளது.

இடிபாடுகளில் சிக்கிய மக்களை மீட்கும் பணியில் ஆயிரக்கணக்கான வீரர்கள் கனமழையிலும், உறைய வைக்கும் குளிரிலும் ஈடுபட்டு வருகின்றனர். சேதமடைந்த வீதிகளால் தொலை தூரத்தில் உள்ள கிராமங்களில் மீட்புப் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன.



கடந்த ஜனவரி 1 ஆம் திகதி ஜப்பானில் அடுத்தடுத்து நிலநடுக்கம் பதிவானது. நோட்டோ தீபகற்பத்தில் இஷிகாவா மாகாணத்தில் ஏற்பட்ட முதல் நிலநடுக்கம் 7.6 ரிக்டராகப் பதிவானது. தொடர்ந்து ஏற்பட்ட நிலநடுக்கங்கள் 3.2 ரிக்டர் முதல் 7.5 ரிக்டர் வரை பதிவாகின.

அடுத்தடுத்து நிலநடுக்கம் ஏற்பட்டதால் சுனாமி எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது. 5 மீற்றர் உயரம் வரை சுனாமி அலைகளை எழலாம் எனக் கணிக்கப்பட்ட நிலையில் அதிகபட்சமாக இஷிகாவா மாகாணத்தின் வாஜிமா துறைமுகத்தில் 1.2 மீற்றர் உயரத்துக்கு அலைகள் எழுந்தன.

இதனையடுத்து அடுத்த நாளில் சுனாமி எச்சரிக்கையை ஜப்பான் அரசு வாபஸ் பெற்றது. ஜப்பானில் கடந்த 2016 ஆம் ஆண்டுக்குப் பிறகு ஏற்பட்ட மிகப்பெரிய நிலநடுக்கம் இது என்ற ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.